### கருப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுத்திட

# பள்ளி மாணவிகளுக்கு HPV - தடுப்பூசித் திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்ட ஆவணத்தை வெளியிட்டார்!

சென்னை, ஜன.29-

**கருப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுத்திடும் வகையில் முதற்கட்டமாக தர்மபுரி, பெரம்பலூர், திருவண்ணா மலை மற்றும் அரியலூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் 30,209 பள்ளி மாணவிகளுக்கு HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கிடும் திட்டத்தை தொடங்கி வைத்து, தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் செயல் திட்ட ஆவணத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.1.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் கருப்பை வாய்ப் புற்றுநோயை தடுத்திடும் வகையில் முதற்கட்டமாக தர்மபுரி, பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய நான்கு மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 14 வயதுடைய 30,209 மாணவிகளுக்கு HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கிடும் திட்டத்தினை தொடங்கி வைத்தார். மேலும், தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் செயல் திட்ட ஆவணத்தை வெளியிட்டார்.

தமிழ்நாட்டில், ஆறு நோய்களை தடுப்பதற்கான விரிவுபடுத்தப்பட்ட தடுப்பூசி திட்டம் 1978-இல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக, நாடு தழுவிய தடுப்பூசி திட்டம் 1985-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

தடுப்பூசி திட்டத்தின் கீழ், 11 வகையான தடுப்பூசிகளை கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் அளித்து 12 வகையான தடுப்பூசியினால் தடுக்கப்படக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 1.2 இலட்சம் பெண்களுக்கு கருப்பைவாய்ப் புற்றுநோய் புதிதாக கண்டறியப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பெண்களை பாதிக்கும் புற்றுநோய்களில் மார்பக புற்றுநோய்க்கு அடுத்தபடியாக, கருப்பைவாய் புற்றுநோய் கண்டறியப்பட்டு வருகிறது. ஹெச்.பி.வி வைரஸ் (HPV - Human Papilloma Virus) தொற்றின் காரணமாக ஏற்படும் கருப்பைவாய் புற்றுநோயை ஹெச்.பி.வி தடுப்பூசி செலுத்துவதின் மூலம் தடுக்க இயலும்.

**HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கிடும் திட்டத்தினை தொடங்கி வைத்தல்**

தமிழ்நாடு அரசின் 2025--2026 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், கருப்பை வாய் புற்றுநோயை தடுக்கவும், தமிழ்நாட்டில் அந்நோயினை அறவே அகற்றிடவும் HPV (Human Papilloma Virus) தடுப்பூசியை 14 வயதுடைய அனைத்து பெண் குழந்தைகளுக்கும் படிப்படியாக வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கென 2025 - 26 ஆம் ஆண்டில் 36 கோடி ஒதுக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக, தடுப்பூசி திட்டத்தினை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த 14 வயதுடைய 3,38,649 பெண் குழந்தைகளுக்கு HPV தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, முதற்கட்டமாக (Pilot phase) கருப்பை வாய் புற்றுநோய் பாதிப்பு அதிகம் உள்ள தர்மபுரி, பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய 4 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அம்மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளிகளில் 30,209 மாணவிகளுக்கு HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கிடும் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக, மாநிலம் முழுவதும் உள்ள எஞ்சிய மாவட்டங்களில் உள்ள 14 வயதுடைய பெண் குழந்தைகளுக்கு இத்தடுப்பூசி செலுத்தப்படும்.

**தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்க செயல்திட்ட ஆவணம் வெளியீடு (Tamil Nadu Cancer Care Mission)**

புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பை மேம்படுத்த தமிழ்நாடு அரசு கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கட்டமைப்பு மேம்பாடு, ஆரம்ப நிலை புற்றுநோய் கண்டறிதல், மற்றும் மேம்பட்ட சிகிச்சை வழங்குதல் உட்பட பல்வேறு அம்சங்கள் இதில் அடங்கும்.

புற்றுநோய் என்பது மக்களின் நலத்திற்கு பெரும் தீங்காக இருந்து வருகிறது. குறிப்பாக, வாழ்க்கைமுறை சார்ந்த மாற்றங்களால் ஏற்படும் புற்றுநோய்கள் அதிகரித்து வருவதால், ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான அணுகுமுறையை செயல்படுத்துவது அவசியமாகிறது.

தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கமானது நோய் தடுப்பு, ஆரம்பநிலையில் கண்டறிதல், நோயறிதல், சிகிச்சை, வலி நிவாரண சிகிச்சை நீடித்த மற்றும் தரமான வாழ்வு ஆகியவற்றை உள்ளடக்கி, விரிவுபடுத்தி புற்று நோயால் ஏற்படும் முன்கூட்டியே நிகழும் இறப்புகளைக் குறைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

ஒருங்கிணைந்த இந்த இயக்கத்தில், மேம்பட்ட தொழில்நுட்பங்கள், சமூகப் பங்களிப்பு மற்றும் புற்றுநோய் ஆராய்ச்சி ஆகியவற்றைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

புற்றுநோய் தாக்கத்தை குறைப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் மூலம் வரும் 5 ஆண்டுகளில் பல தொலைநோக்கு மற்றும் புதுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. இதன் முதல் நடவடிக்கையாக தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் செயல் திட்ட ஆவணத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (27.1.2026) வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. எ.அருண் தம்புராஜ், தமிழ்நாடு மகளிர் வேலை வாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட இயக்குநர் திருமதி ஆஷா அஜித், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் டாக்டர் கே.சோமசுந்தரம், TAFE நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி மல்லிகா ஸ்ரீனிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், காணொலிக் காட்சி வாயிலாக போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற, சட்டமன்றஉறுப்பினர்கள், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் க.தர்பகராஜ், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் திருமதி ந.மிருணாளினி, அரியலூர் மாவட்ட ஆட்சியர் பொ.இரத்தினசாமி, தர்மபுரி மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (27.01.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், உலக மகளிர் உச்சி மாநாடு 2026 தொடக்க விழாவில், தமிழ்நாட்டில் தொழில் துறைகளில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில், UNDP, IPE Global மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், திருமதி கீதாஜீவன், மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் பி. செந்தில் குமார், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட இயக்குநர் திருமதி ஆஷா அஜித், உலக வங்கி மண்டல இயக்குநர் செம்மெட்டே, ஐ.நா. பெண்கள் அமைப்பின் பிரதிநிதி திருமதி காந்தா சிங், மொரிசியஸ் முன்னாள் தலைமை கொறடா திருமதி நவீனா ரம்யாத், TAFE நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி மல்லிகா ஸ்ரீனிவாசன், தொழில்துறை, கல்வித்துறை, பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) பங்காளர்கள், பல்வேறு சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.01.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், உலக மகளிர் உச்சி மாநாடு 2026 தொடக்க விழாவில், மகளிர் விடியல் பயணம் மேற்கொள்ளும் வகையில் பத்து Pink பேருந்துகள், மகளிர் பாதுகாப்பிற்காக பயன்படுத்திடும் வகையில் மகளிர் காவலர்களுக்கான வாகனங்கள், மகளிருக்கான Pink ஆட்டோக்கள் ஆகியவற்றின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், திருமதி கீதாஜீவன், மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு சுற்றுப்பயண விவரம் (27.01.2026)





சென்னை, ஜன.29-

தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கான திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவினர் கனிமொழி கருணாநிதி எம்.பி தலைமையில் தமிழ்நாடு முழுக்க சுற்றுப் பயணம் செய்து மக்களின் பரிந்துரைகளையும், கோரிக்கைகளையும் பெற்று வருகின்றனர்.

கடந்த 19.01.2026 அன்று தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான கருத்துக் கேட்பு கூட்டம் ஓசூரில் நடைபெற்ற நிலையில், நேற்று முன்தினம் (27.01.2026) டெல்டா மாவட்டங்களுக்கான கருத்துக் கேட்பு கூட்டம் காலையில் தஞ்சாவூரிலும், மாலை திருச்சியிலும் நடைபெற்றது.

தஞ்சையில் நடந்த கூட்டத்தில் மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களிலிருந்து விவசாய சங்கங்கள், தொழிற்சங்கங்கள், மீனவ சங்கங்கள், சிறு, குறு தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பு, சாம்பர் ஆப் காமர்ஸ் உள்ளிட்ட 75 க்கும் மேற்பட்ட சங்கங்கள் பங்கேற்று 300க்கும் மேற்பட்ட கோரிக்கைகளை அளித்தனர்.

திருச்சியில் நடந்த கூட்டத்தில் திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலிருந்து 100க்கும் மேற்பட்ட சங்கங்கள் கலந்துகொண்டு அவர்களின் கோரிக்கைகளை வழங்கினர். இக்கூட்டங்களில் பெண்கள், இளைஞர்கள் உள்ளிட்ட பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு அவர் களது பரிந்துரைகளை வழங்கி வருகின்றனர்.

பரிந்துரைகள் பெறத் தொடங்கி 24 நாட்களில் இதுவரை தொலைபேசி, வாட்ஸப், மின்னஞ்சல் மற்றும் AI வழியாக 59,486 பரிந்துரைகளும், கோரிக்கைகளும் பெறப்பட்டுள்ளன.

வரும் ஜனவரி 30ஆம் தேதியன்று இக்குழுவினர் திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய ஊர்களில் சுற்றுவட்டார மாவட்டங்களைச் சேர்ந்த அமைப்பினரை சந்திக்க வுள்ளனர்.

### கூட்டணிக் கட்சியினர் தொடர்பான கருத்துகளை

# கழக நிர்வாகிகள் பொது வெளியில் விவாதிப்பதைத் தவிர்த்திடுவீர்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிவுறுத்தல்!

சென்னை, ஜன.29-

கூட்டணி, தொகுதிப் பங்கீடு மற்றும் கூட்டணிக்கட்சியினர் தொடர்பான கருத்துகளை கழக நிர்வாகிகள் பொதுவெளியில் விவாதிப்பதை முழுமையாகத் தவிர்த்திட வேண்டும் என கழக அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிவுறுத்தியுள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

கூட்டணி, தொகுதிப் பங்கீடு மற்றும் கூட்டணிக்கட்சியினர் தொடர்பான கருத்துகளை கழக நிர்வாகிகள் பொது வெளியில் விவாதிப்பதை முழுமையாகத் தவிர்த்திட வேண்டும். தேவையற்ற சர்ச்சைகளினால் எவ்விதப் பலனும் இல்லை என்பதால் ஆக்கப்பூர்வமான கட்சிப் பணிகளில் கவனம் செலுத்தி தேர்தல் வெற்றியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட வேண்டும். கூட்டணி தொடர்பான முடிவுகளை கழகத்தலைவர் அவர்கள் உரிய நேரத்தில் அறிவிப்பார்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிவித்துள்ளார்.



புதுடெல்லியில், ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை தாக்கல் குறித்து நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நாடாளுமன்ற மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா ஆகியோர் பங்கேற்றனர்.

## கும்மிடிப்பூண்டியில் மருத்துவ முகாம்!

கும்மிடிப்பூண்டி, ஜன. 29-

கும்மிடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியம், வெங்கல் ஊராட்சியில் ஸ்ரீ சாய் மெட்ரிகுலேஷன் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாமை கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் தங்கம் முரளி, ஆ.சத்தியவேலு, ஜி.பாஸ்கர், எம்.எல். டேவிட், எம்.ஜெகன், பி.கே.நாராயணசாமி, கோடுவள்ளி அன்பு, ஆரா. சுரேஷ், பொன்முத்துகுமார், வி.ஜி.சங்கர், தியாகராஜன், கமலேஷ், தினேஷ், கூட்டுரோடு பாஸ்கர், முனுசாமி, எபினேசர் வட்டார மருத்துவ அலுவலர் சங்கீதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



கோவையில் உடல்நலம் குன்றி தனது இல்லத்தில் ஓய்வெடுத்துவரும் மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் ச.விடுதலை விரும்பி அவர்களை கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. சந்தித்து நலம் விசாரித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு, கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பில், கரூர் மாவட்ட அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கான தடகள விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. கரூர் திருவள்ளுவர் மைதானத்தில் மாணவர்களுக்கான தடகள போட்டிகளை துவக்கி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.